***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT***
***Mannargudi***
***CC.No.106/2024 – P.W. 3 (LW8)***

| | |
|---|---|
| *Name* | ரவிச்சந்திரன் |
| *Father/Husband's Name* | பழனிவேல் |
| *Village* | கம்பன்குடி ஆர்ச் |
| *Taluk* | *மன்னார்குடி* |
| *Religion* | |
| *Age* | *59* |

**எதிரி ஆஜர். இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day* 20.05.2026

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். சாட்சி தீனதாளன் என்பவரை தெரியும். என்னிடம் தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வைமகசரிலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 22.07.2023-ம் தேதியன்று காலை சுமார் 9.15 மணி முதல் 9.30 மணியளவில் செம்மொழி நகர் அருகே நானும் தீனதாயாளன் என்பவரும் செம்மொழி நகர் அருகே வந்துக்கொண்டிருந்த போது போலிசார் நின்றுக் கொண்டிருந்தார்கள். போலிசார் அங்கு வரைபடம் வரைந்தார்கள். எதற்காக என்று விசாரித்தபோது முதல்நாள் இரவு விபத்து நடந்ததாகவும், அது சம்மந்தமாக வரைபடம் வரைந்து விசாரித்ததாக கூறினார்கள். எங்களை சாட்சியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் நானும், தீனதாயாளன் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். (**பார்வைமகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் கையெழுத்து செய்ததாக சொல்லப்படும் காலக்கட்டத்தில் ஆளும் கட்சி உறுப்பினர் என்றால் சரிதான். அந்த வகையில் காவல் துறையினரிடம் எனக்கு பழக்க வழக்கம் இருந்ததாக என்றால் சுமரான முறையில் பழக்கம் வழக்கம் இருந்தது. அந்த வகையில் போலிசார் கேட்டதற்கு இணங்க கையெழுத்து செய்துக் கொடுத்தேனா என்றால் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். நான் கையெழுத்து செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்பதை தற்போது நீதிமன்றத்தில் சொல்லமுடியுமா என்றால் 3 வருடம் ஆகிவிட்டதால் ஞாபகம் இல்லை. உண்மையில் நான் எழுதப்படாத வெற்று பேப்பரில் போலிசாருக்கு ஆதரவாக கையொப்பம் செய்து கொடுத்து விட்டு, தற்போது முதல் விசாரணையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்/-) ஜெ.தமிழ்முருகன்,20.05.2026

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.(மு.கூ.பொ.)